**செய்தி வெளியீடு எண்: 924** **நாள்03.12.2020**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்களை இன்று (3.12.2020) காலை மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா அவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு புரெவி புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தார். அப்பொழுது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், புரெவி புயல் குறித்தும், மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் விவரித்தார். அப்பொழுது மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டிற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் வழங்க மத்திய அரசு தயாராக உள்ளதாகத் தெரிவித்தார்.

-----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**